Islam 11 Part I

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 11

# மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)

## இஸ்லாம்

நேரம் :- 3 மணி.

சுட்டெண்: ..............................

பகுதி – I

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

**கவனிக்க**

- **எல்லா வினாக்கக்குக்கும் விடை எழுதுக.**
  **இலக்கம் 01- 40 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1,2,3,4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் (x) இடையாளமிடுக.**
- **மிகச்சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01. நபி (ஸல்) அவர்களுக்கு முதன் வஹியின் போது அருளப்பெற்ற ஐந்து வசனங்களும் இடம் பெற்றுள்ள அத்தியாயம்.
    1. சூரதுல் பாதிஹா 2. சூரதுன் நாஸ் 3. சூரதுல் யாஸீன் 4. சூரதுல் அலக்

02. இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாட்டை எவ்வாறு அழைப்பர்?
    1. இல்முல் பிக்ஹ் 2. இல்முல் ஹதீஸ் 3. இல்முல் அகீதா 4. இல்முல் பராஇழ்

03. "நோன்பு பாவத்திலிருந்து பாதுகாக்கும் கேடயமாகும்" என்பது பின்வரும் எப்பிரிவில் அடங்கும்.
    1. அல்குர்ஆன் ஆகும் 2. அல் ஹதீஸ் ஆகும்
    3. உமர் (ரழி) கூற்றாகும் 4. இப்னு அப்பாஸ் (ரழி) கூற்றாகும்

04. வாழ்க்கைக்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருபவன் எனும் கருத்தை கொடுப்பது எது?
    1. அர்ரஹீம் 2. அல் காதிர் 3. அர் ரஸ்ஸாக் 4. அல் மலிக்

05. நபி தாவூத் (அலை) அவர்களது எதிரியாக இருந்தவன் யார்?
    1. ஜாலூத் 2. பிர்அவ்ன் 3. நும்ரூத் 4. காறூன்

06. இறைவன் இல்லை என்பவன் முல்ஹித் என்பது போல இணை வைப்பவன் எவ்வாறு அழைக்கப்படுவான்.
    1. காபிர் 2. முஷ்ரிக் 3. முர்தத் 4. முனாபிக்

07. ஒருவர் தனது நிலத்தை பயிர்ச் செய்கை நடவடிக்கைக்காக இன்னொருவருக்கு கொடுத்து அதில் வரும் இலாபத்தில் மூன்றில் ஒன்றைப் பெற்றுக் கொள்கின்றார். இது முஆமலாத்தில் எவ்வாறு அழைக்கப்படும்.
    1. முழாரபா 2. இஜாரா 3. முஸாரஆ 4. முஷாரகா

08. வாலிப வயதில் கற்பொழுக்கம் பேணிய நபி பற்றிய வரலாறு அமைந்துள்ள சூரா எது?
    1. சூரா கஃப் 2. சூரா யூஸுப் 3. சூரா நம்ல் 4. சூரா பகரா

09. ஹஜ் கடமையின் போது மினாவில் இடம்பெறும் கிரியை எது?
    1. தவாப் 2. ஸஃயு
    3. கல்லெரிதல் 4. குர்பான் கொடுத்தல்

10. கலீமுல்லாஹ் என அழைக்கப்படும் நபியின் பெயர்
    1. மூஸா (அலை) 2. இப்ராஹீம் (அலை) 3. முஹம்மத் (ஸல்) 4. ஈஸா (அலை)

11. பின்வரும் அட்டவணையில் சில நபிமார்களின் பெயர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதங்களும் தரப்பட்டுள்ளன.

| நபிமார்களின் பெயர்கள் | வழங்கப்பட்ட வேதங்கள் |
|---|---|
| 01. மூஸா (அலை) | A. புர்க்கான் |
| 02. ஈஸா (அலை) | B. ஸபூர் |
| 03. முஹம்மத் (ஸல்) | C. இன்ஜீல் |
| 04. தாவூத் (அலை) | D. தௌராத் |

மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நபிமார்களின் பெயர்களுக்கேற்ப முறையே வழங்கப்பட்ட வேதங்கள் எவை?
    1. ABCD 2. BCAD 3. CBAD 4. DCAB

12. பின்வரும் பதங்களைக் கருதுக
    A. தக்வா B. தஸ்கியா C. தவாஸுன் D. நபகா
    E. ரிழா F. மஹப்பத் G. வலி H. தக்ரீரி

    1. ABCD 2. BCDE 3. ABEF 4. ACDE

13. பின்வருவனவற்றுள் “குல்உ” பற்றிய சரியான கூற்று எது?
    1. கணவன் மூலம் நிகழ்வதாகும்
    2. மனைவியை தாய்க்கு ஒப்பாக்குவதாகும்
    3. கணவனுக்கு நன்கொடை ஏதேனும் வழங்கி மனைவி பிரிவதாகும்
    4. கணவன் அல்லது மனைவி மதம் மாறுவதாகும்

14. நஜ்ஜாஸி மன்னனிடம் இஸ்லாம் பற்றி விளக்கமளித்த நபித் தோழர் யார்?
    1. முஆதிப்னு ஜபல் (ரழி) 2. ஸைதிப்னு ஸாபித் (ரழி)
    3. பிலால் (ரழி) 4. ஜஃபர் (ரழி)

15. அகபா உடன்படிக்கையைத் தொடர்ந்து யஸ்ரிபுக்கு நபி (ஸல்) அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட நபித் தோழர் யார்?
    1. முஸ்அப் இப்னு உமைர் (ரழி) 2. உஸ்மான் பின் அப்பான் (ரழி)
    3. ஸல்மானுல் பாரிஸி (ரழி) 4. ஸஅதிப்னு அபீ வக்காஸ் (ரழி)

16. ஹுதைபியா உடன்படிக்கை ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டில் இடம் பெற்றது.
    1. ஹிஜ்ரி 6 ல் 2. ஹிஜ்ரி 7 ல் 3. ஹிஜ்ரி 8 ல் 4. ஹிஜ்ரி 10 ல்

17. “ஸப்உ முஅல்லகாத்” எனப்படுவது யாது?
    1. மதினாவின் பாதுகாப்பு அகழி 2. கஃபாவின் மறுபெயர்
    3. ஜாஹிலிய்யாக்கால இலக்கியப் படைப்பு 4. ஜாஹிலிய்யாக்கால கோத்திரங்கள்

18. இஸ்லாத்தின் துணை மூலாதாரங்களுல் அடங்காதது எது?
    1. இஸ்திஹ்ஸான் 2. இஸ்திஸ்ஹாப் 3. இஸ்திஸ்லாஹ் 4. இஸ்திஸ்காஉ

19. “ஹனீப்கள்” எனப்படுவோர் யாவர்?
    1. ஜாஹிலிய்யாக் காலத்தில் ஷிர்க்கில் ஈடுபடாதவர்கள்
    2. நபியவர்களுடன் இணைந்திருந்தவர்கள்
    3. ஹிஜ்ரத்தில் கலந்து கொண்டவர்கள்
    4. திண்ணைத் தோழர்கள்

20. தயம்மும் செய்வதற்குத் தேவைப்படும் பொருள் எது?
    1. சுத்தமான நீர்  2. புழுதியுள்ள மண்  3. பென்டேஜ்  4. தொப்பி

21. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
    A. ஹஜ்ஜுக்கு நிய்யத் வைப்பது மீகாதில் ஆகும்
    B. தவாப் முடித்ததும் ஸம்ஸம் நீர் குடிப்பது சுன்னத்தாகும்
    C. செல்வம் உடையவர்கள் வருடாந்தம் ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டும்
    D. ஹஜ்ஜுக்குச் செல்பவர் எல்லோரிடமும் பயணம் கூற வேண்டும்

    மேற்குறித்தவற்றுள் ஹஜ் பற்றிய சரியான கூற்றுக்கள் யாவை?

    1. A மாத்திரம்  2. Aயும் Bயும் மாத்திரம்
    3. A,B,C என்பன  4. A,B,C,D என்பன

22. ஆலிமு குறைஷ் என அழைக்கப்பட்டவர் யார்?
    1. இமாம் ஷாபிஈ (ரஹ்)  2. இமாம் மாலிக் (ரஹ்)
    3. இமாம் கஸ்ஸாரி (ரஹ்)  4. இமாம் யூசுப் அல்கர்ளாவி (ரஹ்)

23. கிப்லா மாற்றப்பட்டதன் நினைவாகக் கட்டப்பட்டுள்ள பள்ளிவாசல் எது?
    1. மஸ்ஜிதுந் நபவி  2. மஸ்ஜிதுல் அக்ஸா
    3. மஸ்ஜிதுத் தமிரா  4. மஸ்ஜித் கிப்லதைன்

24. நோன்பு நோற்பது தடைசெய்யப்பட்ட நாடகள் எவை?
    1. அய்யாமுத் தஷ்ரீக்  2. அய்யாமுல் பீழ்
    3. அய்யாமுஸ்ஸுத்  4. அய்யாமுல் ஜாஹிலிய்யா

25. குறிப்பிட்ட கடமையை ஹதீஸ் குத்ஸில் அல்லாஹ் ''எனக் குரியது அதற்கான கூலியை நானே கொடுக்கிறேன்'' எனக் கூறும் கடமை எது?
    1. தொழுகை  2. நோன்பு  3. ஸக்காத்  4. ஹஜ்

26. ஹதீஸ் திரட்டும் பணியை அரச பணியாக மேற்கொண்ட கலீபா யார்?
    1. முஆவியா (ரழி)  2. உமரிப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்)
    3. உமர் (ரழி)  4. ஸைதிப்னு ஸாபித் (ரழி)

27. திருமண ஒப்பந்தத்தில் சாட்சியாக வருபவரை சட்ட அறிஞர்கள் எவ்வாறு அழைப்பர்?
    1. வலி  2. ஷாஹித்  3. ஈஜாப்  4. கபூல்

28. பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அகீதாப் பிரிவு யாது?
    1. ஷீயா  2. கவாரிஜ்  3. கத்ரிய்யா  4. மு.்.தஸிலா

29. லுஹர் தொழுகைக்காக சென்ற சலீம் ஹாஜியார் பள்ளிவாசலுக்குச் சென்ற போது இமாம் நடு அத்தஹிய்யாத்தில் அமர்ந்திருந்தார். இந்த இருப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
    1. தவர்ருக்  2. இப்திராஷ்  3. இ.்.திதால்  4. கியாம்

30. கணவன் மரணித்ததற்காக இத்தா இருக்கும் ஒரு பெண் செய்யக் கூடாத ஒரு விடயம் எது?
    1. கைத் தொலைபேசி பாவித்தல்  2. வைத்தியரிடம் செல்லல்
    3. திருமணம் முடித்தல்  4. உழைக்கச் செல்லல்

31. குழந்தை பிறந்த ஏழாம் நாள் கொடுக்கப்படும் குர்பான் எவ்வாறு அழைக்கப்படும்?
    1. உழ்ஹிய்யா  2. பித்ரா  3. அகீகா  4. நத்ர்

32. ''ஹய்ய அலல் பலாஹ்'' என்பதன் கருத்து யாது?
    1. தொழுகை ஆரம்பமாகிவிட்டது  2. தொழுகைக்கு விரைந்து வாருங்கள்
    2. வெற்றியின் பக்கம் விரைந்து வாருங்கள்  4. அல்லாஹ் மிகப் பெரியவன்

33. ‘‘முஹாஸபா’’ என்பது எதைக் குறிக்கும்
1. சுயவிசாரனை 2. உளத்தூய்மை 3. இறையச்சம் 4. பொறுமை

34. ‘‘தக்பீர் தஹ்ரீமா’’ ஓதப்படும் சந்தர்ப்பம் எது?
1. தொழுகையின் ஆரம்பத்தில்
2. க.ஃபாவைத் தவாப் செய்கையில்
3. ஜனாஸாவுக்காக கட்டப்படுவது
4. நாளாந்த ஓதலில் ஒன்று

35. கீழே ‘‘அ’’ நிரலில் சில நூலாசிரியர்களும் ‘‘ஆ’’ நிரலில் அவர்களால் எழுதப்பட்ட நூல்களும் தரப்பட்டுள்ளன.

| | ‘‘அ’’ | ‘‘ஆ’’ |
|---|---|---|
| I. | சித்தி லெப்பை | A. அஜாயிபுல் ஹிந்த் |
| II. | எமேர்ஸன் டெணண்ட் | B. அஸன்பே சரித்திரம் |
| III. | இப்னு ஸஹ்ரயார் | C. ஸிலோன் |

இங்கு ‘‘அ’’ நிரலுக்கமைய ‘‘ஆ’’ நிரல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?
1. ABC 2. BCA 3. CAB 4. DBC

36. ஷபீனா பாடசாலையை விட்டு வீட்டுக்கு வந்த போது காலையில் துவைத்து காயவிட்ட ஆடையை நாய் இழுத்துச் செல்வதைக் கண்டாள். இவ்வாடையை சுத்தம் செய்ய மிகப் பொருத்தமான முறையைத் தெரிவு செய்க?
1. சலவை இயந்திரத்தில் ஏழு முறை கழுவுதல்
2. ஸவலவாத் கூறி ஏழு முறை கழுவுதல்
3. புழுதியுள்ள மண் இட்டு ஏழு முறை கழுவுதல்
4. நீரால் ஏழு முறை கழுவுதல்

37. பின்வருவனவற்றுல் பொருத்தமான ஒத்த கருத்தைக் குறிக்கும் சோடி எது?
1. கல்புன் ஸலீம் - கல்புல் முத்மஇன்னா
2. ஸஹீஹ் - மவ்லூவ்
3. துன்யா – ஆகிரா
4. உஸ்தாத் - துல்லாப்

38. அஜ்னபியான ஓர் ஆணுடன் பெண்ணொருவர் தனித்திருப்பது பற்றிய சட்டத்தின் தீர்ப்பு யாது?
1. மக்றூஹ் 2. ஜாஇஸ் 3. ஹராம் 4. முஸ்தஹப்பு

39. கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் அதிபராகவும், அரசியல் பிரமகராகவும் இருந்து நாட்டுக்குப் பணியாற்றியவர் யார்?
1. சித்தி லெப்பை 2. I.L.L.A.அஸீஸ் 3. T.B.ஜாயா 4. M.A.M.சுக்ரி

40. தேனீர், நீரின் வகைகளுல் எப்பிரிவில் அடங்கும்?
1. தஹூர் 2. தாஹிர் 3. நஜீஸ் 4. முஸ்த.ஃமல்

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 11

மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)

சுட்டெண்: ..............................

# இஸ்லாம்

## பகுதி II

**முதலாம் வினாவிற்கும் விரும்பிய ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.**

1. சுருக்கமாக விடை தருக?
   - i. ஜாஹிலியாயாக் காலத்தில் காணப்பட்ட சந்தைகள் இரண்டைப் பெயரிடுக?
   - ii. இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் இரண்டு தருக?
   - iii. பர்ளு ஐனுக்கு இரண்டு உதாரணம் தருக?
   - iv ஸுஜுதில் ஓதவேண்டிய துஆவை உமது மொழியில் எழுதுக?
   - v இஸ்லாம் ஆகுமாக்கிய வர்த்தக முறைகள் இரண்டு தருக?
   - vi இஜ்மாவின் இரு வகைகளைக் குறிப்பிடுக?
   - vii குலபாஉர்ராஷிதூன்கள் இருவரின் பெயர்களைத் தருக?
   - viii இத்தாவின் இரு வகைகளைக் குறிப்பிடுக?
   - ix வஹியின் இரு வகைகளும் எவை?
   - x பிக்ஹுக் கலைக்குப் பங்காற்றிய இமாம்கள் இருவரின் பெயரைத் தருக?

(10x2=20 புள்ளிகள்)

2. i இஸ்லாமிய அகீதா என்றால் என்ன?
   - ii நஜீஸின் வகைகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக?
   - iii அல் மாஉல் முஸ்த.்.மலை எவ்வாறு மீளவும் சன்மார்க்கத் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும் என்பதை விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

3. i ஹதீஸ் என்றால் என்ன?
   - ii அஸ்ஸிஹாஹுஸ்ஸித்தா நூல்களைக் குறிப்பிடுக?
   - iii குழா கத்ரை நம்புவதால் கிடைக்கும் பயன்கள் ஐந்தை விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

4. i ஸக்காத் பற்றிய அல் குர்ஆன் கருத்தொன்றை எழுதுக?
   - ii ஸக்காத் விதியாகும் பொருட்கள் மூன்று தருக?
   - iii உமது பிரதேசத்தில் கூட்டாக ஸக்காத் கடமையை நிறைவேற்ற முடியுமான முறையைக் கறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

5. i இலங்கை முஸ்லிம்களின் ஆரம்ப குடியேற்றங்கள் அமைந்திருந்த இடங்கள் இரண்டைக் குறிப்பிக?

ii இலங்கை தேசத்திற்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக?

iii ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிமுறைகள் ஐந்தை சுருக்கமாக விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

6. i ஈமானைப் பாதிக்கும் அம்சங்கள் நான்கைக் குறிப்பிடுக?

ii அல்-குர்ஆனைப் பாதுகாக்கும் பணியில் உஸ்மான் (ரழி) அவர்களின் பங்களிப்பை விளக்குக?

iii இலங்கை உம்மத் என்ற வகையில் எம்மிடம் இருக்க வேண்டியப பண்புகள் ஐந்தை சுருக்கமாக விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் விரும்பிய இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக?

i பிக்ஹுல் அவ்லவிய்யத்

ii கஸ்ரு – ஜம்உ

iii அஜ்னபிகளுடன் வரையறை பேணல்

iv அல் - இஜ்திஹாத்

(2x5=10 புள்ளிகள்)



WWW.PastPapers.WIKI

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

# வடமேல் மாகணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை- 2022
# இஸ்லாம்
# தரம் - 11
# விடைப்பத்திரம்

## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1. 4 | 11. 4 | 21. 2 | 31. 3 |
| 2. 3 | 12. 3 | 22. 1 | 32. 3 |
| 3. 2 | 13. 3 | 23. 4 | 33. 1 |
| 4. 3 | 14. 4 | 24. 1 | 34. 1 |
| 5. 1 | 15. 2 | 25. 2 | 35. 2 |
| 6. 2 | 16. 1 | 26. 2 | 36. 3 |
| 7. 2 | 17. 3 | 27. 2 | 37. 1 |
| 8. 2 | 18. 4 | 28. 4 | 38. 3 |
| 9. 3 | 19. 1 | 29. 2 | 39. 3 |
| 10. 1 | 20. 2 | 30. 3 | 40. 2 |

(40x1=40 புள்ளிகள்)

## பகுதி II

01 i உக்காழ், மிஜன்னா, துல்மஜாஸ்

ii உயிர் வாழ்வதற்கான உரிமை, கருத்து வெளிப்பாட்டு உரிமை, கணவனைத் தெரிவு செய்யும் உரிமை, சொத்துரிமை, கல்வி கற்கும் உரிமை, தொழில் செய்யும் உரிமை.

iii ஐங்காலத் தொழுகை, ஸக்காத், பெற்றோருக்கு உபகாரம் செய்தல்.

iv ஸுப்ஹான ரப்பியல் அ.்.லா வபிஹம்திஹி

v முழாரபா, முஷாரகா, ஸலம், இஜாரா, ரஹன்

vi இஜ்மாஉஸ் ஸரீஹ், இஜ்மாஉல் அக்ஸரிய்யா, இஜ்மாஉஸ் ஸுகூதி, இஜ்மாஉ முரக்கப்

vii கலீபா அபூபக்ர் (ரழி), கலீபா உமர் (ரழி), கலீபா உஸ்மான் (ரழி), கலீபா அலி (ரழி),

viii இத்தா இரு வகை 1 தலாக்குக் குரியது 2. மரணத்துக் குரியது

ix வஹி மத்லுவ், வஹி கைரு மத்லுவ்

x இமாம் மாலிக் (ரஹ்), இமாம் ஷாபிஈ (ரஹ்), இமாம் அஹ்மத் (ரஹ்), இமாம் அபூ ஹனீபா (ரஹ்),

1. I இறுதியானதும், உறுதியானதுமான சான்றுகளைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையைக் குறிக்கும்.

II மூன்று வகை:- சாதாரண நஜீஸ் மலம், சலம், இரத்தம்
இலகுவான நஜீஸ் தாய்ப் பாலை மாத்திரம் உணவாக உட்கொள்ளும் 2 வயதிற்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர்
கடுமையான நஜீஸ் நாய், பன்றியின் லம், சலம், உமிழ்நீர்

III இது குல்லதைனைவிடக் குறைந்த மிகச் சுத்தமான, பர்ளான குளிப்பு, வுழு என்பவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டதாகும். இதில் மேலதிகமாக சுத்தமான நீரை ஊற்றி குல்லதைன் அளவை அடையச் செய்து மிகச் சுத்தமான நீராக மாற்றிய பின்னர் மீளவும் பயன்படுத்தலாம்.

2. I நுபி (ஸல்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம் என்பன ஹதீஸ் ஆகும்.

II ஸஹீஹ் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம், ஜாமிஉத் திர்மிதி, ஸுனன் அபூதாவுத், ஸுனன் நஸாஈ, ஸுனன் இப்னு மாஜா

III மன திருப்த்தி ஏற்படுத்தல், பொறுமையைக் கடைபிடித்தல், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல், விரக்தி அடையாமை, தொடர் முயற்சிக்கு வழிவகுத்தல்.

3. I தொழுகையை நிலைநாட்டுங்கள், ஸகக்காத்தையும் கொடுத்து வாருங்கள்.
II தங்கம், வெள்ளி, பணம், வியாபரப் பொருட்கள், ஆடு, மாடு, ஒட்டகை, தாணியங்கள், புதையல், கனியங்கள்.
III பொருத்தமான முறையில் புள்ளி வழங்குக

4. I கொழும்பு, பேருவளை, காலி, மாத்தரை
II வேளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுத்தல், நெசவுத் தொழிலை வளர்த்தமை, தவலப் போக்குவரத்து அறிமுகம், தேசிய அரசியலில் பங்களிப்பு
III ஸப்ர், தவக்குல், ரிழா, மஃரிபா, ஸித்க், வரஃ, போன்ற பண்புகள் ஐந்தை சுருக்கமாக விளக்கியிருப்பின் 1க்கு ஒரு புள்ளி வீதம் வழங்குக.

5. I இல்ஹாத், குப்ர், ஷிர்க், ரித்தத்
II ஹப்ஸா (ரழி) அவர்களிடம் இருந்த அல்குர்ஆன் பிரதியை, பிரதிபன்னி 8 காரிகளுடன் 8 பிரதேசங்களுக்கு அனுப்பி, அல்குர்ஆனை ஓதுவதில் ஏற்பட்ட வேறுபாட்டை நீக்கிய பின்னணியை சுருக்கமாக எழுதியிருப்பின் மூன்று புள்ளிகள் வழங்கவும்.
III தேசத்தின் மீது அன்பு வைத்தல், தேசத்திற்கு விசுவாசமாக நடத்தல், தேச மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல், தேசத்தின் ஐக்கியத்துக்காக பங்காற்றுதல், தேசத்தின் சிவில் சட்டங்களுக்கு மதிப்பளித்தல் இவை போன்ற 5 விடயங்கள் சுருக்கமாக விளக்கியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.

6. I பிக்ஹுல் அவ்லவிய்யாத்
முதன்மைப் படுத்தவேண்டியவை பற்றிய சட்ட ஒழுங்கு என்பது இதன் கருத்தாகும்.
ஒரு முஸ்லிம் முக்கியமானதை விட முக்கிமல்லாதவற்றிற்கோ, மிக முக்கியமானதைவிட முக்கியமானவற்றிற்கோ முன்னுரிமை வழங்காதிருப்பது.
இதுபற்றி அல் குர்ஆன் கூறும் சிறு விளக்கம்
“பனூ இஸ்ராயீல் சமூகம் பற்றியது 2:61, யூதர்களது கிப்லா பற்றியது 2:177
இக்கருப் பொருளை உதாரணம் ஒன்றுடன் விளக்கியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.
II கஸ்ரு – ஜம்உ
கஸ்ரு என்பது தொழுகையை சுருக்கித் தொழுதல்.
ஜம்உ என்பது தொழுகையை சேர்த்துத் தொழுதல்.
இது பிரயாணிகளுக்கு வழங்கப்பட்ட சலுகையாகும்
கஸ்ர் செய்வது 4ரக்காத் தொழுகையை இரண்டு ரக்காத்தாக தொழுவதாகும். உ+ம் லுஹர், அஸர், இஷா.
மஃரிப்+ இஷா, லுஹர் + அஸர் என சேர்த்துத் தொழு முடியும்.
ஜம்உத் தொழுகை தக்தீம், தஃஹீர் என இருவகைப்படும்.
தொழுகையை எச்சந்தர்பத்தில் விட்டு விடக்கூடாது என்பதையே கஸ்ரு, ஜம்உ உணர்த்துகிறது.
III அஜ்னபி வரையரை
பார்வையைத் தாழ்த்துதல்.
அவ்ரத்தை முழுமையாக மறைக்கக்கூடிய வகையிலும் மரியாதையான அமைப்பிலும் ஆடை அணிதல்
நடை, உடை, பாவனை, பேச்சு அனைத்திலும் இஸ்லாமிய ஒழுக்கங்களைப் பேணிக் கொள்ளுதல்
தவறான உணர்வுகளைத் தூண்டக்கூடிய அனைத்து விதமான காரியங்களிலிருந்தும் விலகியிருத்தல்.
சமூக நலன் விடயங்களில் இஸ்லாமிய வரையரைகளைப் பேணி நடந்து கொள்ளல்.
ஆண், பெண் தனித்திருத்தலுக்கான சந்தர்ப்பங்களைத் தவிர்ந்து கொள்ளல்.

IV அல் - இஜ்திஹாத்
மொழிக் கருத்து முயற்சித்தல் என்பதாகும்
பரிபாசையில் புதிய பிரச்சினையொன்று தோன்றி அதற்கான தீர்வை அல்குர்ஆனோ, ஸுன்னாவோ நேரடியாக வழங்கியிருக்காத போது குர்ஆன், சுன்னாவில் ஆழமான அறிவுள்ளவர்கள் இவை இரண்டையும், அடிப்படையாகக் கொண்டு தீர்வு காண எடுக்கும் முயற்சியே இஜ்திஹாத் ஆகும்.
இது பற்றி அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள்.
முஜ்தஹித்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள்.
முஜ்தஹித்துக்குரிய கூலி என்பன உள்ளடக்கி ஐந்து விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் ஐந்து புள்ளிகள் வழங்குக

PAST PAPERS WIKI



WWW.PastPapers.WIKI
Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!